
# உங்கள் நிரப்புத்தொகைகளை இரட்டிப்பாக்குங்கள்

## வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில் ஓய்வுக்காலக் கணக்கில் தொகை நிரப்பும் திட்டத்துடன் (MRSS)

**55 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சிங்கப்பூரர்கள் மேலும் சேமிக்க, அவர்களின் மத்திய சேமநிதி பணி ஓய்வுக்காலக் கணக்கு (RA) க்கு செய்யப்பட்ட ரொக்க நிரப்பு தொகைக்கு ஆண்டுக்கு $2000 வரையிலான இணையான மானியம் வழங்குவதன் மூலம் MRSS உதவுகிறது.**

**$20,000* வாழ்நாள் வரம்புடன்.




## நன்மைகள்:

- வெள்ளிக்கு வெள்ளி வழங்கப்படும் இணையான மானியத்துடன் உங்களுக்கான ரொக்க நிரப்புத்தொகையை இரட்டிப்பாக்குங்கள்
- ஆண்டுக்கு 6%^ வரையிலான மத்திய சேம நிதி வட்டி விகிதத்துடன் உங்கள் ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள சேமிப்பைப் பெருக்குங்கள்
- ஓய்வுக்காலத்தில் நீங்கள் பெறும் மாதாந்தர வழங்குதொகைகளை அதிகரியுங்கள்

| நீங்கள் செலுத்தும் ரொக்க நிரப்புத்தொகை... | உங்களுக்குக் கிடைக்கும் இணையான மானியம்... | உங்களது ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள சேமிப்பில் மொத்த அதிகரிப்பு... |
|---|---|---|
| ஆண்டிற்கு $600 | ஆண்டிற்கு $600 | $1,200 |
| ஆண்டிற்கு $2000 | ஆண்டிற்கு $2000 (அதிகபட்சம்) | $4,000 |

## தகுதிநிலை

நீங்கள் MRSS திட்டத்திற்குத் தகுதி பெற்றால், ஒவ்வோர் ஆண்டின் துவக்கத்திலும் மத்திய சேம நிதிக் கழகம் உங்களிடம் தெரியப்படுத்தும்.

cpf.gov.sg/checkmrss

நீங்கள் இணையம் வழியாகவும் உங்கள் தகுதிநிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

## ரொக்க நிரப்புத்தொகை செலுத்துவது எப்படி?

**oதெரிவு 1**

**பேநவ்** டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்

**தெரிவு 2** (சிறிய தொகையாக இருந்தாலும் வழக்கமான முறையில் நிரப்புத்தொகைகள்)

**ஜைரோ** அக்டோபர் 31 ஆம் தேதிக்குள்

**நிரப்புத்தொகை செலுத்த இப்போதே *cpf.gov.sg/cashtopup* இணையத்தளத்தை நாடுங்கள்!**

இணையான மானியம் அதற்கடுத்த ஆண்டின் துவக்கத்தில் உங்களது ஓய்வுக்காலக் கணக்கில் சேர்க்கப்படும்.

**MRSS* மானியம் பெறும் ரொக்க நிரப்புத்தொகைகள் வரி நிவாரணத்திற்குத் தகுதி பெறமாட்டாது.

^ஓய்வுக்காலக் கணக்குக்கு ஆண்டுக்கு 4% அடிப்படை வட்டி என்பதன் அடிப்படையிலானது. 55 வயதை எட்டிய மூத்தோருக்கு, மொத்த மத்திய சேம நிதி இருப்புத்தொகையில் முதல் $30,000 தொகைக்கு 6% வரையிலும் (சாதாரணக் கணக்குக்கு $20,000 வரம்புண்டு), அடுத்த $30,000 தொகைக்கு 5% வரையிலும் (சாதாரணக் கணக்குக்கு $20,000 வரம்புண்டு) வட்டி கிடைக்கும்.

**மேலும் தெரிந்துகொள்ள, cpf.gov.sg/mrss இணையத்தளத்தை நாடுங்கள்**